பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: புரட்டாசி 7உ (23—9—67) சனி ★ வெளியூர்: புரட்டாசி 8உ (24—9—67) ஞாயிறு [இதழ்: 85

## வாதியும் பிரதிவாதியும்!

"எனக்கு இப்போது இருக்கும் ஆசையெல்லாம்—ஆர்வமெல்லாம் அரசியலில்தான்!"

—மொரார்ஜி தேசாய்

"நான் முதலில் விரும்புவது சட்டத்தைத்தான்!"

—பதவி விலகி பம்பாய் வந்தடைந்தபோது சாக்ளா கூறியது

# அண்ணு ஆட்சியே நீடிக்கட்டும்!

## இந்த ஆட்சியைப்போல் வரலாறு கண்டதில்லை!

## பெரியாரின் உள்ளந் திறந்த பாராட்டும் பெருமிதமும்!

### காங்கிரசுக்காரர்களின் கீழ்த்தரமான போக்குக்குக் கண்டனம்

சென்னை, செப். 23—

"இதுவரையில் சரித்திரம் காணுத அளவுக்கு—நூறு, ஆயிரம் ஆண்டு வரலாற்றில் கண்டிராத அளவுக்கு—நமக்கு ஒரு நல்ல ஆட்சி கிடைத்துள்ளது; அதுவும் பகுத்தறிவாளர் ஆட்சி—அதிலும் தமிழன் ஆட்சி; இத்தகைய ஆட்சி—இவர்களைத் தவிர—இனி கிடைக்கவும் கிடைக்காது!

"இவர்களை ஒழித்துவிடக் காங்கிரசார் நெருப்புமேல் நிற்பதுபோலத் துடித்துக் கொண்டிருக்கிருர்கள்! இவர்கள் போனுல் வேறு யார் அந்த இடத்துக்கு வருவார்கள்? இவர்களைப்போல யார் ஆளமுடியும்?

"காங்கிரசுக்காரர்களுக்குப் பதவி இல்லையென்ருல் பிழைப்பு இல்லை; அதனுல்தான் அவர்கள், கண்டபடி பேசுகிருர்கள்! அமைச்சரவையையும் என்னையும் ஏசுகிருர்கள்! கீழ்த்தரமாக எழுதுகிருர்கள்! அதற்கு அவர்களுக்குப் பணம் செலவழிக்க ஆள் இருக்கிருர்கள்! மத்திய அரசாங்கம் அவர்களிடத்தில் இருப்பதால் ஆதரவும் கிடைக்கிறது! மானத்தைப் பற்றி அவர்களுக்குக் கவலை இல்லை!

"இவர்கள் ஆட்சிக்கு வந்தபின், என்ன தவறு செய்திருக்கிருர்கள்? அப்படிச் செய்திருந்தாலும் காங்கிரசுக்காரர்கள் செய்ததைவிடவா இவர்கள் செய்திருப்பார்கள்?

"நான்கூட முதலில், 'இவர்கள் ஒரு ஐந்தாண்டு வரை ஆண்டால் போதும்' என்றுதான் நினைத்தேன்; இப்போது காங்கிரசுக்காரர்கள் நடந்துகொள்வதைப் பார்க்கும்போது, 'இவர்களே மேலும் ஒரு ஐந்தாண்டு அல்ல—பத்தாண்டு அல்ல—இவர்களே நீடித்து இருக்கட்டும்' என்றே சொல்லத் தோன்றுகிறது"

என்று, திராவிடர் கழகத் தலைவர் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள், நேற்று மயிலாப்பூரில் நடந்த அறிஞர் அண்ணு பிறந்த நாள் விழாவில் பேசுகையில் மனந்திறந்து கூறினுர்கள்.

பெரியார் அவர்கள் மேலும் பேசியதாவது:—

"நான் அறிஞர் அண்ணு அவர்களைப் பாராட்டவோ, வாழ்த்தவோ வரவில்லை; இப்படிப்பட்டவர்களைத் தேர்ந்தெடுத்து ஒரு நல்ல ஆட்சியை ஏற்படுத்திய உங்களையெல்லாம் பாராட்டவும், இந்த ஆட்சி நீண்டகாலம் நீடித்து இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும் என்று எடுத்துக் கூறவும்தான் வந்தேன். அப்படிக் கூறுவது என்னுடைய கடமை.

**நீங்களெல்லாம் ஒரு முடிவான கருத்தை கொள்ளவேண்டும். இந்த ஆட்சிக்கு எவ்வித இடையூறும் இல்லாமல் பாதுகாக்க உறுதிகொள்ள வேண்டும்.**

காங்கிரசுக்காரர்களால் ஒன்றும் செய்ய முடியாது! ஒரு தூசியைக்கூட அசைக்க முடியாது! அவர்கள் போக்கைப் பார்த்தாலே இது புரியும்! கண்டபடி பேசியும் எழுதியும் விட்டால் இந்த ஆட்சியை ஒழித்துவிடலாம் என்று எண்ணுகிருர்கள்; இது, இனி நடக்குமா?

இப்படிப்பட்டவர்களை மக்கள் நம்புவார்களா? அடுத்த ஐந்தாண்டுகள் கழித்து இவர்கள் பதவிக்கு வந்தாலும், என்ன செய்வார்கள்? இப்போது நடந்துகொள்ளும் விதத்திலே தானே நடந்துகொள்வார்கள்?

இப்படிப்பட்டவர்களை எப்படி மக்கள் ஆதரிப்பார்கள்?

எனவே, இவர்களால் இனி, கழக ஆட்சியை அசைக்கவும் முடியாது—பதவிக்கு வரவும் முடியாது."

பெரியார் அவர்கள் தொடர்ந்து பேசுகையில், 'தேசபக்தி' என்பதெல்லாம் பித்தலாட்டம் என்றும், 'இந்தியை எதிர்ப்பது தேசத்துரோகம்' எனக் கூறுவதைக் கண்டு ஏமாந்துவிடக்கூடாது என்றும், 'தேசபக்தி'யின் பேரால் இந்தியையும், தங்கள் ஆதிக்கத்தையும் தமிழன் மீது திணிக்க முயல்கிருர்கள் என்றும் எடுத்துக் கூறினுர்.

மற்றும், 'சிவசேனை' பற்றியும் கண்டித்துப் பேசினுர்.

அண்ணுவை, 'ஜஸ்டிஸ் கட்சியின் பரம்பரை' என்று குற்றஞ்சாட்டி, 'ஜஸ்டிஸ் கட்சி தேசத்துரோகக் கட்சி' என்று சொல்லுவது எந்த அளவுக்குப் பொருத்த மற்ற பித்தலாட்டப் பேச்சு என்பதையும் விளக்கினுர்கள்.

"ஜஸ்டிஸ் கட்சி ஆட்சியினுல்தான் தமிழன் தலைநிமிர்ந்தான்! 'தமிழன் என்ற ஓர் இனம் இருக்கிறது' என்பது மற்றவர்களுக்குத் தெரிந்தது!

"இன்று ஜஸ்டிஸ் கட்சியைக் குறை கூறுபவர்களெல்லாம், தங்களுக்கு இப்போது கிடைத்திருக்கும் அந்தஸ்தைப் பெற்றதே அந்த ஜஸ்டிஸ் கட்சியினுல்தான்"

என்று பெரியார் அவர்கள் விளக்கமாக எடுத்துரைத்தார்கள்.

## பெரியார்--குன்றக்குடி அடிகளார் கலந்துகொண்ட அறிஞர் அண்ணு பிறந்தநாள் விழா

### அமைச்சர்கள் கருணுநிதி---செ. மாதவன்-- மற்றும் தோழமைக் கட்சியினர் பங்கேற்பு

சென்னை, செப். 23—

சென்னை மாவட்ட தி.மு.க. சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட அண்ணு பிறந்த நாள் விழாவின் எட்டாம் நாள் நிகழ்ச்சியாக நேற்று மயிலாப்பூர் மந்தை வெளிப்பாக்கத்தில் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

மயிலைப் பகுதி தி.மு.க. செயலாளர் எஸ். வி. வேலு தலைமையில் நடைபெற்ற இம்மாபெரும் பொதுக்கூட்டத்தில் பெரியார் ஈ.வெ.ரா., குன்றக்குடி அடிகளார், அமைச்சர்கள் மு. கருணுநிதி, செ. மாதவன் ஆகியோருடன், சுதந்தராக் கட்சித் தோழர் எச். வி. ஹண்டே எம்.எல்.ஏ., தமிழரசுக் கழகத்தைச் சேர்ந்த மா. சி. கிருஷ்ணமூர்த்தி, முஸ்லிம் லீக் தோழர் காஜா மொய்தீன் எம்.சி. ஆகியோரும் கலந்துகொண்டு, அண்ணு அவர்களின் சிறப்பியல்புகளையும், அறிவாற்றலையும், சீரிய பணிகளையும் பாராட்டி உரையாற்றினர்.

மற்றும் தோழர்கள் இராம. அரங்கண்ணல் எம்.எல்.ஏ., வி. எஸ். கோவிந்தராசன் எம்.எல்.ஏ., கி. வீரமணி ('விடுதலை' ஆசிரியர்), கே. ஏ. கிருஷ்ணசாமி, அரக்கோணம் ஏ. எல். சி. கிருஷ்ணசாமி, மாவட்டச் செயலாளர் நீலநாராயணன், மாவட்ட கழகப் பொருளாளர் டி. கே. கபாலி எம்.சி., டி. கே. பொன்னுவேலு, கோமகன், பக்கிரி ஆகியோரும் பேசினர்.

கூட்டத்தில் தாய்மார்கள் உட்படப் பல்லாயிரவர் திரண்டிருந்தனர்.

கூட்டம் துவங்குமுன் நடைபெற்ற வாண வேடிக்கைகளில், 'பெரியார் வாழ்க'—'அண்ணு வாழ்க' என்று ஒளி காட்டி நின்ற வாணம், அனைவரையும் ஈர்த்தது.

பெரியார் அவர்களின் பிறந்த நாள் காணிக்கையாக சென்னை மாவட்ட தி. மு. க. சார்பில் பெரியார் அவர்களிடம் 101 ரூபாயை மாவட்டச் செயலாளர் நீலநாராயணன் வழங்கினுர்; நடிகர் கண்ணன் ரூ. 11 அளித்தார்; மற்றும பலர் மாலையணிவித்தனர்; மாலைக்குப் பதிலாகப் பலர் ஒரு ரூபாய்—இரண்டு ரூபாய் என்று பணமாக அளித்தனர்.

பெரியார் அவர்கள் இரண்டு பெண் குழந்தைகட்கு 'அறிவுக்கண்ணு', 'அருமைக்கண்ணு' என்றும், அமைச்சர் கருணுநிதி அவர்கள் ஒரு குழந்தைக்கு 'பாண்டியன்' என்றும் பெயர் சூட்டினுர்கள்.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்பட்ட இராஜாஜி அவர்கள், உடல் நலக் குறைவால் தாம் கலந்துகொள்ள இயலவில்லை என்பதைத் தெரிவித்து, வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தார்கள்; அந்த வாழ்த்துச் செய்தியை நீலநாராயணன் கூட்டத்தில் படித்தார்.

## இங்குள்ள காங்கிரசுக்காரர்களே-- இதற்குக் கொஞ்சம் பதில் சொல்லுங்கள்!

22—9—67 அன்று மாலை—கொச்சி கடற்படை விமானத் தளம் — தலைமை அமைச்சர் இந்திரா, கேரளப் பயணத்தை முடித்துக்கொண்டு கோவா நோக்கிப் புறப்படுகிருர்!

ஆனுல், வழியனுப்ப வந்திருந்தவர்களிலும், ஒரு முக்கிய 'தலை'யைக் காணுேம்!

கேரளப் பிரதேசக் காங்கிரசுத் தலைவர் கே. சி. ஆபிரகாம்தான் அவர்!

கேரளப் பிரதேசக் காங்கிரசு செயலாளருக்கு, அழைப்பு அனுப்பவில்லையாம் அரசினர்!

அதை எதிர்த்து, தலைவர் ஆபிரகாம், தலைமையமைச்சரை வழியனுப்ப வரவில்லை!

அழைப்பு அனுப்பப்படாத செயலாளருக்காக, அழைப்பைப் பெற்ற தலைவரே வரவில்லை!

இது, செய்தி

இப்போது தமிழகத்துக்கு வருவோம்.

தலைமையமைச்சர் இந்திரா தமிழகத்திற்கு வந்தபோது—அவருடைய வருகைக்கு—சென்னை, மதுரை ஆகிய இரண்டுமே முக்கிய இடங்களாக இருந்தன.

தமிழகத்தில் தங்குதலைத் துவக்கிய வகையில்—சென்னை!

'தங்கிய இடம் கொடைக்கானல்' என்ற வகையில் மதுரை!

ஆக, இரு நகரங்களுமே அவரது பயணத்தில் முக்கியமானவை!

திருநெல்வேலிச் சுற்றுப்பயணத்தில் இருந்த முதலமைச்சர் அப்படியே மதுரை வரவேற்பில் வந்து கலந்துகொண்டார்!

தமிழகப் பயணமே முடிந்து இந்திரா டில்லி திரும்பியபோது, சென்னை விமானநிலையத்தில் அவரை வழியனுப்பிவைத்தார்—முதலமைச்சர்!

இது நடந்தது.

இருந்தாலும், முன்னுள் முதலமைச்சராக இருந்த பக்தவத்சலம், பதவியிலிருந்து இறங்கி வந்ததோடு மட்டுமல்லாமல், தரத்திலும் இறங்கிவந்து,

"ஏன் அண்ணுதுரை, சென்னை விமானநிலையத்துக்கே வந்து வரவேற்கவில்லை?"

என்று கேட்டார்.

இது போதாதா, கீழே உள்ளவர்களுக்கு? எனவே, அவர்களும் பேசினுர்கள்—எழுதினுர்கள்!

இப்போது கேரளத்துச் செய்திக்கு என்ன பேசுவார்கள்? எழுதுவார்கள்?

எதிர்பார்ப்பதில் தவறு இல்லை—விளக்கம் வருமா?

—'பாக்சர்'

# பட்ட மரம் துளிர்த்தது--கெட்ட குடி பிழைத்தது!

## அறிஞர் அண்ணு ஆட்சியில் நடந்துவரும் அற்புதங்கள்!

## ஆதித்தனுர் துவக்கிவைக்க---அமைச்சர்கள் கருணுநிதி, மா. முத்துசாமி முன்னிலையில் நெல்லை நகராட்சி புத்துயிர் பெற்ற காட்சி!

### ஆயிரக்கணக்கானவர் திரள ஊர்வலம் நடத்தி நகர மாந்தர் விழாக் கொண்டாடிய மாட்சி!

"'பட்ட மரம் துளிர்க்காது-கெட்ட குடி மீளாது' என்பது பழமொழி! இந்தப் பழமொழியும் பொய்த்துவிட்டது---அண்ணுவின் ஆட்சியில்! பட்டது துளிர்த்தது---கெட்ட குடி வாழ்ந்தது! கலைக்கப்பட்ட நெல்லை நகராட்சி புத்துயிர்பெற்றது!

"எது நடக்க முடியாது என்று எண்ணி ஒரு காலத்தில் பெருமூச்சு விட்டோமோ, அது, இன்று நடந்துவருவதைப் பார்க்கிறேம்"

என்று பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. மு. கருணுநிதி அவர்கள், நெல்லை நகராட்சி மீண்டும் இயங்கத் துவங்கிய விழாவில் பேசுகையில் கூறினர்.

காங்கிரசு ஆட்சிக் காலத்தில் கலைக்கப்பட்ட நெல்லை நகராட்சி மன்றம் இன்று மீண்டும் செயல் படத் துவங்கிற்று.

சட்டமன்ற அவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனுர் துவக்கி வைத்தார்.

இந்த விழாவில் பொதுப் பணித் துறையமைச்சர் மு. கருணுநிதி, உள்ளாட்சித்துறை யமைச்சர் திரு. மா. முத்துச்சாமி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இவ்விழாவையொட்டி நகரமே விழாக்கோலம் பூண்டிருந்தது. மாபெரும் ஊர்வலமும் நடைபெற்றது.

அவைத் தலைவர் ஆதித்தனுர், அமைச்சர்கள் மு. கருணுநிதி, மா. முத்துசாமி, நகராட்சித் தலைவர் மஜீத், மாவட்ட தி. மு. க. செயலாளர் எம். எஸ். சிவசாமி ஆகியோர் பூக்களால் அலங்கரிக்கப்பட்ட தேரில் அமர்ந்து ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

அண்ணு வயதைக் குறிக்கும் வகையில் 59 வெடிகள் முழங்க ஊர்வலம் புறப்பட்டது.

ஏராளமான தாய்மார்களும், ஆயிரக்கணக்கான கழகத் தொண்டர்களும், பொதுமக்களும் ஊர்வலத்தில் பங்குகொண்டு அண்ணு வாழ்க என்று முழங்கிவந்தனர்.

ஐயாயிரம் பேர்களுக்கு உணவளிக்கப்பட்டது. உணவளிப்பை, ஆதித்தனுரும் அமைச்சர்களும் துவக்கிவைத்தனர்.

ஊர்வலம் நகராட்சி மண்டபத்திற்கு வந்தடைந்ததும், நகராட்சி மன்றக் கூட்டம் தொடங்கியது; ஆதித்தனுர் தொடங்கிவைத்தார்.

கூட்டத்தை, அமைச்சர்கள், ஆதித்தனுர், மற்றும் மாவட்டக் கலெக்டர் ஆகியோர் கவனித்துக் கொண்டிருந்தனர்.

கூட்டம் தொடங்கியதும் முதலமைச்சர் அண்ணு படத்துக்கு நகராட்சித் தலைவர் மஜீத் மாலையணிவித்தார்.

நகராட்சியை மீண்டும் இயங்கச் செய்தமைக்காக, நன்றி தெரிவிக்கும் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

"முதலமைச்சர் அண்ணு, அமைச்சர்கள் நெடுஞ்செழியன், கருணுநிதி ஆகியோர் படங்களை நகராட்சிப் பள்ளிகளில் திறந்து வைக்க வேண்டும்" என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

### மு. கருணுநிதி

அமைச்சர் கருணுநிதி அவர்கள் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"என்றைக்காவது ஒரு நாள் சனநாயகம் வெற்றி பெறும் என்பதற்கு, நெல்லை நகராட்சி புத்துயிர் பெற்றது ஓர் எடுத்துக் காட்டாகும்!

வேறு யாருக்கும் கிடைக்காத வாய்ப்பு நெல்லை நகராட்சித் தலைவருக்குக் கிடைத்துள்ளது. ஒருவருக்கு ஒருமுறைதான் திருமணம் நடைபெறும்; நமது நெல்லை நகராட்சித் தலைவர் மஜீத் ஒரே பெண்ணை (நெல்லை நகராட்சியை) இருமுறை மணந்திருக்கிருர்."

### மா. முத்துச்சாமி

அமைச்சர் மா. முத்துசாமி பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"அறிஞர் அண்ணு படத்தைத் திறந்துவைத்தற்காக இந்த நகராட்சி கலைக்கப்பட்டது; ஆனுல் இன்று வரலாறு திரும்பிவிட்டது."

### சி. பா. ஆதித்தனுர்

திரு. சி. பா. ஆதித்தனுர் பேசியதாவது:—

"நெல்லை நகராட்சி, சனநாயகத்துக்கு விரோதமான முறையில் கலைக்கப்பட்டது; இதற்கு முதலமைச்சர் அண்ணு மீண்டும் புத்துயிர் கொடுத்தார்; இது, வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய நிகழ்ச்சியாகும்."

### அண்ணு வாழ்த்து

நெல்லை நகராட்சியை மீண்டும் இயக்கிவைக்கும் விழாவுக்கு, முதலமைச்சர் அண்ணு அவர்கள் அனுப்பிய வாழ்த்துச் செய்திவருமாறு:—

"கொள்கைப் பற்றும், நல்லார்வமும் மிக்க மஜீத் அவர்கள் நெல்லை நகராட்சித் தலைவராகி—ஆற்றல்மிக்க தொண்டாற்றி—மக்களின் நன்மதிப்புப் பெற்று வருவது கண்டு மனம் பொருதவரின் போக்கும், திட்டமும், அவ்விளைஞர் சில காலம் பொறுப்பிலிருந்து விலக்கப்பட்டு நிற்கும் நிலையை ஏற்படுத்தின!

"பின்னர், முகிலைக்கிழித்து வெளிக்கிளம்பும் முழுமதிபோல் வெளிவந்து, தண்ணொளி பரப்பி வருவது என்போன்ருேர் பல்லோருக்கு இனிமையும் குளிர்ச்சியும் தருவது இயல்பு.

"வாழ்க மஜீத்! வாழ்க அவர் நற்றெண்டு! நீதி வென்றது! நேர்மை மீண்டும் கோலோச்சுகிறது! மகிழ்ச்சி—பாராட்டு!"

# ரோமாபுரி!

இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

ரோம் நகரில் நான் அதிக நாட்கள் தங்கவில்லை. ஆகஸ்டு 16 (புதன்கிழமை) பிற்பகல் 1-30 மணிக்கு இறங்கி, மறுநாள் மாலை 6-மணிக்கு ரோமிலிருந்து கிளம்பிவிட்டேன். இதில் 4-மணி நேரமாவது விமான நிலையத்திலிருந்து ஊருக்குள் செல்லவும், திரும்ப விமானநிலையம் வந்து காத்திருக்கவும் செலவழிந்திருக்கும். மிகுந்த நேரத்தில், வரலாற்றுப் புகழ்பெற்ற ரோம் நகரின் சில பகுதிகளை என்னுல் பார்க்க முடிந்தது.

இந்தியத் தூதுவரகத்தைச் சேர்ந்த திரு. டட்டா என்பவரும், 'ஏர் இந்தியா' கம்பெனியைச் சேர்ந்த ஒருவரும் என்னை வரவேற்று—விமான நிலையச் சடங்குகளைச் சீக்கிரத்தில் முடித்து—வெளிக் கொண்டுவந்தனர். நேராக 'ஓட்டல் பாஸ்டன்' என்ற விடுதிக்கு நான் சென்றேன்.

'ரோம்' என்ற சொல்லுக்கு 'நதியின் நகர்' என்ற பொருளாம். டைபர் நதிக்கரையில் உண்டான ரோம் நகர், பேரரசின் தலைநகராக நீண்டகாலம் இருந்திருக்கிறது. தொடர்ச்சியான வரலாறும் அங்கு உள்ளது.

ரோம் நகரம், கி. மு. 754-ல் உருவாக்கப்பட்டதாம். கி. மு. 4-வது நூற்றுண்டில், இத்தாலி முழுவதும் ரோம் ஆதிக்கத்தின்கீழ் வந்தது. கி. மு. 3-ம் நூற்றுண்டில், வெளிநாட்டுப் படையெடுப்புகள் துவங்கின.

சீசர்கள் ஆட்சியில் ரோம் பேரரசின் எல்லை விரிவடைந்தது; வடக்கில் இங்கிலாந்திலிருந்து தெற்கில்ஆப்பிரிக்காவின் வடபகுதி வரையும், கிழக்கில் ஆசியா — எகிப்து எல்லைப் பகுதியிலிருந்து மேற்கே ஸ்பெயின் வரையும் ரோம் நாட்டின் சட்ட திட்டம் பரவியது.

இந்தக் காலத்தில், ரோமானிய கலாச்சாரம் ஒளி பெற்று விளங்கியது! பிறகு, ரோம் பேரரசு வீழ்ந்தது—சிதறியது! கி. பி. 6-ம் நூற்றுண்டில், பைசாண்டிய பேரரசு ரோம் நகரைத் தலைமைப் பீடமாகக்கொண்டு வளர்ந்தது!

பேரரசின் தலைமைப்பீடமாக மட்டுமல்லாமல், கிருத்துவ மதத்தின் புனித நகரமாகவும் ரோம் ஆனது—போப்பாண்டவர்களின் அரசியல் ஆதிக்கத்தின்கீழ் ரோம் மீண்டும் தலைதூக்கியது!

ஆஸ்திரியாவின் கீழிருந்து இத்தாலி 1897-ல் விடுதலை பெற்று, இமானுவல் அரசரின் ஆட்சி மலர்ந்தது!

முசோலினியின் வீழ்ச்சிக்குப்பின் இமானுவல் அரச பரம்பரையினர் மீண்டும் ஆட்சிக்கு வந்தனர். முடியாட்சி நீடிப்பதா அல்லது குடியாட்சி தேவையா என்பதுபற்றி 1946-ல் ஒரு வாக்கெடுப்பு நடைபெற்றது; அதில், குடியாட்சிக்குச் சாதகமாக அதிக வாக்குகள் கிடைக்கவும், மன்னர் மூன்ருவது இமானுவல் ஆட்சி துறந்தார்—குடியரசுத் தலைவர் பொறுப்பேற்ருர்!

தமது பழைய வரலாற்றை நினைவுறுத்த சீசர் காலத்தில் கட்டப்பட்ட பல கட்டிடங்களின் சிதைவுகள், இன்னமும் ரோமில் இருக்கின்றன!

ரோம் பேரரசு வளர்ந்து விரிவடைந்த நிலைமைகளை விளக்கி—படங்கள்—ஒரு பொது இடத்தில் அரசாங்கத்தால் இன்றைக்கும் எழுதி வைக்கப் பட்டுள்ளன!

வரலாற்றுப் பழமையும் கலைச் செல்வங்களின் பெருமையும் ரோம் நகருக்கு ஆயிரக்கணக்கான பயணிகளை வரவழைக்கின்றது. சென்ற ஆண்டு மட்டும் 2½ கோடி பயணிகள் உல்லாசப் பயணத்தில் ரோமுக்கு வந்திருக்கின்றனர்! அவர்களால் இத்தாலி நாட்டுக்குக் கிடைக்கிற வருமானம் ரூ. 710 கோடி பெறுமானமுள்ளதாம்!

இத்தாலி நாட்டு வருமானத்தில் பயணிகள் தருவது ஒரு குறிப்பிடத்தகுந்த பகுதியாகும்! வருபவர்களுக்காக விடுதிகளும், உணவுச்சாலைகளும், சிறுசிறு கவர்ச்சிச் சாமான்களும் ஏராளமான அளவில் வைக்கப்பட்டுள்ளன.

நான் ரோம் நகரில் தங்கியிருந்தபொழுது, தமிழகத்தைச் சேர்ந்த திரு. டி. வி. அந்தோணி என்பவர் அங்கு தம் குடும்பத்துடன் வந்திருந்தார். தமிழக அரசாங்கப் பகுதியைச் சேர்ந்த அவர், மத்திய அரசின்கீழ் ஏற்றுமதி முன்னேற்றத்திற்காகப் பெல்ஜியம் நாட்டிலிருந்து பணியாற்றி வருகிருர். விடுமுறையில், தமது காரில்—பின் பக்கத்தில் ஒரு குடும்பம் தங்குவதற்குரிய 'டிரெயிலர்' வண்டியுடன்—அங்கு வந்திருந்தார். அவர் தமது காரில் என்னை அழைத்துச் சென்று, ரோம் நகரின் முக்கிய இடங்களைக் காட்டுவதில் உதவியாக இருந்தார்.

ரோம் நகரில் நான் பார்த்தவற்றில் மிகப் பழைமையான இடம், 'போரோ ரோமானே' என்பதாகும்; அதாவது, பழைய ரோம அரசர்கள்—சீசர்கள் காலத்திலிருந்து கட்டப்பட்ட கட்டிடங்களின் சிதைந்த தோற்றம் இங்கிருக்கிறது! ஜூலியஸ் சீசர் கி. மு. 54-ல் கட்டிய மாளிகையில் மூன்று தூண்கள் மட்டும் அங்கு நிற்கின்றன! ஜூலியஸ் சீசர் கொல்லப்பட்ட செனட் மண்டபமும், அகஸ்டஸ் சீசர் உண்டாக்கிய வெற்றிச் சின்னங்களும், வீனஸ் தேவதையின் கோயிலும், சனி தேவனுக்கு உண்டாக்கப்பட்ட கோயிலும், சிதைந்துபோன தூண்கள் மட்டும்—நிற்கிற நிலையில்—இன்று இருக்கின்றன!

வெற்றிமுரசு கொட்ட சீசர்கள் பவனி வந்ததும், வீரர்கள் ஆரவாரித்ததும், மக்கள் கூக்குரல் எழுப்பியதும், ரோம் நகரின் எழுச்சியும் வீழ்ச்சியும் அடங்கிய வரலாறு, இந்த இடத்தில், 'ஒலி—ஒளி'க் காட்சியாக இரவு நேரத்தில் காட்டப்பட்டு வருகிறது!

பழைய சிற்பங்களில் சிதையாது இருப்பது, கி. பி. 315-ல் எழுப்பப்பட்ட 'கான்ஸ்டன்டைன் வளைவு' என்ற வெற்றிச் சின்னமாகும். இதில் மார்க்கஸ் அரேலியஸ், கான்ஸ்டன்டைன் ஆகியோரின் போர் விவரங்கள் சிற்பங்களாகச் சித்தரிக்கப் பட்டுள்ளன!

படத்தில் கான்ஸ்டன்டைன் வளைவுக்குப் பின்னணியில் வலதுபுறமாகத் தெரிவது, 'கொலிசியம்' என்ற விளையாட்டு அரங்கமாகும். கி. பி. 72-ல் கட்டப்பட்ட இந்த அரங்கம், ரோமானிய அரசர்களின் பொழுதுபோக்கு இடமாகும்!

"மன்னருக்குப் பொழுதுபோக்கு; மக்களுக்கோ உயிரின் வாதை" என்று புரட்சிக் கவி பாரதிதாசன் ஓரிடத்தில் கூறியதுபோல், ரோமானிய மன்னரின் பொழுதுபோக்கு, மக்களின் உயிரை வாங்கும் விளையாட்டாக அங்கு இருந்தது!

'கொலிசியம்' அரங்கில்—சிங்கம், புலி போன்ற மிருகங்களுடன் அடிமைகளைப் போராட விட்டு, அரசரும் அரசிகளும், பிரபுக்களும், ரோம் நாட்டு மேட்டுக் குடியினரும் வேடிக்கை பார்த்தனர்! 188 அடி உயரமுள்ள அந்த அரங்கம், வட்ட வடிவமாகக் கட்டப்பட்டு, மூன்று மாடிகளைக் கொண்டதாக இருந்தது. 620 அடி குறுக்களவு உள்ள அந்தக் கட்டிடத்தின் மத்தியில் பள்ளம் உண்டாக்கப்பட்டு, அதில் மனிதனும்—சிங்கமும் போராடினர்! மிருகங்களைக் கீழே அடைத்து வைத்த இடங்களும், அடிமைகள் கொண்டுவரப்படும் வழிகளும் இன்றும் காட்டப்படுகின்றன!

அரங்கத்தில் 50 ஆயிரம் பேர்கள் அமர்ந்து வேடிக்கை பார்ப்பார்களாம்; தண்டிக்கப்பட்ட அல்லது அரசரின் பொழுதுபோக்குக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அடிமையை மைதானத்தில் நிறுத்தி, பல நாள் பட்டினி போடப்பட்ட சிங்கத்தை அவிழ்த்து உள்ளே விடுவார்கள்—போராட்டம் நடைபெறும் — முடிவு — கூறத் தேவையில்லை! அடிமையின் உடல் சிதைந்து, சிறிது நேரத்தில் எலும்புகள் சிதறிக்கிடக்கும்! இந்தக் காட்சியை மன்னரும், மாபெரும் பிரபுகளும், அரச குடும்பத்தினரும், மதுக்கோப்பைகளைச் சுவைத்தபடி பார்த்து இரசிப்பார்களாம்!

ஒரு மனித – மிருகப் போராட்டம் முடிந்ததும், அடுத்த சிங்கம் அல்லது புலி அல்லது சிறுத்தை உள்ளே வரும்—இரை தேடி! தொடர் நாடகத்தைப் போல், இந்தக் காட்சிகள் அடுத்தடுத்து வந்துகொண்டே இருக்கும்!

அந்தக் 'கொலிசியம்' கட்டப்பட்டு துவக்க நாள் கொண்டாடப்பட்ட அன்று மட்டும், அந்த விழாவுக்காக 500 சிங்கங்கள்—புலிகள் — சிறுத்தைகள் உள்ளே விடப்பட்டு, அடிமைகளுடன் போராடினவாம்!

மனிதனும்—சிறுத்தையும் போராடுவது மட்டுமல்ல; அடிமைகளையே ஒருவருடன் ஒருவர் போராட விடுவார்களாம்; ஆயுதங்களாக வாள் அல்லது நீண்ட வேல் தரப்படும். ஒரு அடிமை மற்ருேர் அடிமையைக் கொன்றுவிட்டால், அவனுக்கு விடுதலை கிடைக்கும்!

சில சமயங்களில், அண்ணன்—தம்பி, தந்தை—மகன் என்று தேர்ந்தெடுத்துப் போராட விடுவார்களாம்! விடுதலை வேண்டுமென்ருல் வெற்றிபெற வேண்டும்; வெற்றிபெற வேண்டுமென்ருல் எதிரிலுள்ள தம்பியையோ, மகனையோ கொன்ருக வேண்டும்! இந்தக் கொடுமை தாளாமல், தங்களைத் தாங்களே குத்திக்கொண்டு இறந்துவிடுவார்களாம்!

"பள்ளத்தில் சீறிவரும் மிருகங்களை விட, மேட்டில் சிரித்துக் கொண்டிருக்கும் மனித மிருகங்கள்தாம் அதிகக் கொடுமை நிறைந்த காட்சியாக இருந்திருக்கும்" என்று, அந்த இடத்தைப் பார்த்த பொழுது எனக்குப்பட்டது!

கொடுமையின் கூடங்களாக விளங்கிய 'கொலிசியம்' போன்ற மாடங்கள் மட்டும் ரோம் நகரின் வரலாற்றுச் சின்னங்களாக இல்லை! கலை உலகின் கருவூலங்களாகக் கருதப்படும் பல ஓவியங்களும், சிலைகளும் ரோம் நகரில் இருக்கின்றன.

வடிகன் அரண்மனையிலும், செயின்ட் பீடர்ஸ் மாதா கோயிலிலும், மற்றும் பல இடங்களிலும் புகழ்பெற்ற பல ஓவியங்களும், சிற்பங்களும் நிறைந்திருக்கினறன. மைக்கேல் ஆங்கிலோ, ரபேல், லியோனர்டோ டா வின்சி போன்ற கலை மேதைகளின் அற்புத படைப்புகள், ரோம் நகரை இன்று அழகுபடுத்துகின்றன! அவர்களின் கையில் வண்ணங்கள் உயிர் பெற்றன—திரையில் நடமாடுகின்றன! கல், கனிவு பெற்றுச் சிலைகளாக நிற்கின்றன!

ரோம் நகரில், அழகுச் சிலைகள் கலைக்கூடங்களில் மட்டுமல்ல—கடை வீதியில் – முச்சந்தியில் – ஆற்றுப் பாலத்தில் – கோட்டைச் சுவரில் -- எல்லா இடங்களிலும் இருக்கும்!

(4-ம் பக்கம் பார்க்க)

# காந்தியாருக்கு மனநிறைவூட்டும் அரிய பணி!

## சென்னைச் சீரணி பற்றி ஜெயப்பிரகாசர்

சென்னை, செப். 21—

சென்னை ஊரூரில் சீரணியினர் பத்தே நாட்களில் கட்டி முடித்த பள்ளிக் கட்டிடத்தை சர்வோதயத் தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணன் இன்று பார்வையிட்டார்.

கட்டிடம் கட்டுவதற்கு ஆன நாட்கள்—செலவு — ஈடுபட்ட தொண்டர்களின் எண்ணிக்கை —அவர்களுடைய சமூகத் தகுதி —ஆகிய விவரங்களை, சீரணித் தனி அதிகாரி பரமசாமியிடமும், தலைவர் நீலநாராயணனிடமும் அவர் கேட்டறிந்தார்.

தம் வருகையின் நினைவாக திரு. ஜெயப்பிரகாசர், தென்னங்கன்று ஒன்றை நட்டார்.

சிறப்பான முறையில் இவ்வளவு விரைந்து தனது பணியை முடித்திருக்கும் சீரணியைப் பாராட்டி அவர் கூறியதாவது :—

"சர்வோதய மாநாடு நடைபெற்றபோதே தலைநகரத்துச் சீரணி பற்றி அறிந்தோம்; உடன், அந்த மாநாட்டிலேயே இப்பணியைப் பாராட்டி,வாழ்த்துரைத்துத் தீர்மானம் ஒன்றையும் நிறைவேற்றினோம்.

**"மகாத்மா காந்தி இருந்திருந்தால், இத்தகைய ஒரு சீரணியைத் தம் முழு மனத்தோடு பாராட்டி நல்வாழ்த்தும் நல்கியிருப்பார்.**

**"மக்களின்இத்தகைய சொந்த முயற்சிகளிலேயே இந்த நாட்டின் வருங்காலமும் வளமும், அமைதியும் அடங்கியுள்ளன.**

**"இத்தொண்டு சிறக்க, வெற்றிகள் பல பெற்றிட நான் வாழ்த்துகிறேன்.''**

திரு. ஜெயப்பிரகாசரை இராம அரங்கண்ணல் எம்.எல்.ஏ., முத்து ராமலிங்கம் ஆகியோர் எதிர் கொண்டு வரவேற்றனர். அவருடன் டாக்டர் விஜயலட்சுமி, எஸ். ஆர். சுப்பிரமணியம் ஆகியோரும் வந்திருந்தனர்.

# 'சிவ சேனை'யும் 'புரு'ச் சேனையும்!

"நாட்டில் அவ்வப்பொழுது தோன்றும் அராஜகத்தைக் குறித்து எல்லோரையும்விடக் காங்கிரசுக் கட்சிக்கு அதிகக் கவலை ஏற்பட்டுள்ளது.

அண்மையில் தமிழகத்தில் அது தோற்றுவித்துள்ள 'வெண் புரு'ச் சேனை, இதற்கொரு சான்று!

பம்பாயில் சிவசேனை—சென்னையில் வெண்புருச் சேனை!

"இந்தப் புதிய சேனை, ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக நடத்தப்படும் போராட்டத்தில் ஈடுபடுத்தப்பட மாட்டாது என்று உறுதி தரப்பட வேண்டும். அதிலும், சென்னையில் இந்த உறுதி மொழிக்குத் தேவை மிக அதிகம்"

என்று புதுடில்லியிலிருந்து வெளிவரும் 'தினமான்' என்னும் இந்தி மொழி ஏடு எழுதியுள்ளது.

# இன்பமே இன்னதென்றறியாத இருபதாண்டுகள்!

## அமைச்சர் மு. கருணாநிதி விளக்கம்

சென்னை, செப். 13—

"மேல்நாட்டு மக்களின் வாழ்க்கை பெரும்பாலும் மகிழ்ச்சியாகவே அமைந்திருக்கும்; அவர்களது வாழ்க்கையில் என்றுவது ஒரு நாள்தான் துன்பம் ஏற்படும்; ஆனால், நமது நாட்டில் என்றுவது ஒரு நாள்தான் மக்களின் வாழ்க்கையில் மகிழ்ச்சி ஏற்படுகிறது

"இருபதாண்டுக் காங்கிரசு ஆட்சியில் துன்பம் ஒன்றையே அனுபவித்துவந்த மக்களுக்கு, இன்பம் பயக்கும் வாழ்க்கை வசதிகளை அளிக்கப் பாடுபட்டு வருகிறோம்"

என்று பொதுப்பணி அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள், இன்று காலை இராயபுரத்தில் நடந்த புதுமனை புகுவிழா ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

இராயபுரம் சூரியநாராயணச் செட்டித் தெரு, சொக்கலிங்க கிராமணி தோட்டத்தில் கழகத் தோழர் என். எஸ். இராசு அவர்களின் புதிய இல்லத்தைத் திறந்து வைத்து, அமைச்சர் கருணாநிதி அவர்கள் உரையாற்றினர்கள்.

இந்த விழாவுக்கு வண்ணைத் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு. மு. வேதாசலம் தலைமை வகித்தார்.

முகவை மாவட்ட தி. மு. க. செயலாளர் தோழர் எஸ். எஸ். தென்னரசு அவர்கள் வாழ்த்துரை வழங்கினர்.


தோழர் மா. செங்குட்டுவன் வரவேற்று உரையாற்றினர்.

குடிசைகளுக்கு நடுவே, எழிலுற கட்டப்பட்டிருந்த புதிய இல்லத்தைத் திறந்துவைத்து, அமைச்சர் பேசியதாவது :—

"இந்த இல்லத்தைக் குடிசைகளுக்கு நடுவே கட்டியிருக்கும் நண்பர் இராசு அவர்கள், தமது உழைப்பால் இன்று இந்த நிலைக்கு வந்திருப்பதாக நண்பர் செங்குட்டுவன் பேசுகையில் கூறினர்.

இந்த இல்லம் குடிசைகளுக்கு மத்தியிலே சின்னஞ்சிறு குடிலாகக் கட்டப்பட்டிருந்தாலும், இதனைக் கட்டிய நண்பர் இராசுவின் எண்ண மாளிகை பெரிது! அந்த மாளிகையிலே தமது இலட்சியத்தைக் குடியமர்த்தி வைத்திருக்கிறார்!

"விரிந்த எண்ணத்தைச் சுருங்கச் சொல்வதுதான் குறள்! அதைப்போல், விரிந்த எண்ணமுடைய நண்பர் இராசு குடிபுகவிருக்கும் இந்தச் சின்னஞ்சிறு இல்லத்திற்குக் 'குறளகம்' என்று பெயர் சூட்டுகிறேன்."




1½ டன் எடை சாமான் ஏற்றும்
பார்கோ D-300


சிறிய வண்டிகளிலே பெரிது; பெரிய வண்டிகளின் உழைப்பு. சுருங்கச் சொன்னால் நடுத்தரமான நல்ல வண்டி பார்கோ D-300. அதிகச் சாமான்களை ஏற்றிச் செல்ல அடக்கமான வண்டி பார்கோ D-300. சாலைகளிலே சங்கடமில்லாமல் ஓட்டவும் போக்கு வரத்து நெரிசலைச் சுலபமாகச் சமாளிக்கவும் பொருத்தமான வண்டி பார்கோ D-300. பிக் அப்-வான், டெலிவரி வான், ஸ்டேஷன் வாகன், ஆம்புலன்ஸ் ஆகிய எந்த விதத்திலும் உபயோகிக்கலாம். நகரத்திலும் அதன் சுற்றுப்புறங்களிலும் ஆட்களையும் சாமான்களையும் குறைந்த செலவில் ஏற்றிச் செல்ல, இணையற்ற வண்டி பார்கோ D-300


*சக்தி மிக்க 28.35 H.P. பெட்ரோல் என்ஜின் ● 3,112 மீ.மீ. (123'') WB அல்லது 3,336 மிமி (133'') WB ஆகிய இரண்டில் விருப்பமானதைத் தேர்ந்தெடுக்கலாம் ● சுலபமாகவும் விரைவிலும் ரிப்பேர் செய்ய பானெட் திறப்பு வசதி.*

● (பிரிமியர் ஆட்டோமோபைல்ஸ் தயாரிப்பு)

தவணை ஏற்பாடு

சுந்தரம் பைனான்ஸ் லிமிடெட் மூலம் சுலபமான மாதத் தவணைகளில் வாங்கலாம்.





முழு விவரங்களுக்கு அன்பு கூர்ந்து அணுகுக:

டி. வி. சுந்தரம் அய்யங்கார் & சன்ஸ் பிரைவேட் லிமிடெட் மதுரை - திருச்சி - திருநெல்வேலி - புதுக்கோட்டை - சேலம் - கோயமுத்தூர் - திருவனந்தபுரம். சப் டீலர்கள்: P. N. கிருஷ்ண அய்யர் & ஸன்ஸ் பிரைவேட் லிமிடெட், திருச்சூர் - C. C. ஆட்டோமோபைல்ஸ் லிமிடெட், கள்ளிக்கோட்டை - திருவிலோன் ஆட்டோமோபைல்ஸ் லிமிடெட், கொல்லம் - மனோரஞ்சன் காங்கூலி & ஸன்ஸ் பிரைவேட் லிமிடெட், புதுச்சேரி.

சுந்தரம் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட் மதராஸ் - பங்களூர் - செகந்திராபாத் (A.P.) சப்டீலர்கள்; காரபதி காராஜ் 1959, விஜயவாடா - ஸ்ரீ பட்டாபிராம் கமர்ஷியல் சிண்டிகேட், காக்கிநாடா, விசாகப்பட்டிணம் - D. S. ஆட்டோமோபைல்ஸ், நெல்லூர் - தி மோட்டார் சேல்ஸ் கம்பெனி, அனந்தப்பூர் கர்நூல் - T. N. ரகுநாத ரெட்டி, கடப்பை - ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஆட்டோமோபைல்ஸ், ஹோஸ்பேட் - P. V. பய் & கம்பெனி மங்களூர், மெர்க்காரா

TVS

51-4272

# கன்னடரும் போர்க் கொடி உயர்த்துகின்றனர்!

'இந்தியை ஆட்சிமொழியாக்க வேண்டும்' என்ற கொள்கையை ஆதரிக்கும் மைசூர் மாநில அரசின் போக்கைக் கண்டித்து. 'கன்னட பச்ஷா' என்ற நிறுவனம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

அரசினரின் இந்த அழிவுப் போக்கை எதிர்த்துப் போராட, கருநாடக மாநிலத்திலுள்ளவர்களுக்கு அது அழைப்பு விடுத்துள்ளது.

# காங்கிரசுக்காரர்களின் 'இந்தி விசுவாசம்'

கருநாடக மாநிலத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்தியைப் பயிற்சி மொழியாகக் கொண்ட உயர்நிலைப் பள்ளிகளைத் திறப்பது என்றும், மாநிலத்தில் இரண்டு இந்திக் கல்லூரிகளைத் திறப்பது என்றும் தட்சிண பாரத இந்திப் பிரசார சபையின் கருநாடகக் கிளை. தீர்மானம் செய்துள்ளதாக அதன் தலைவர் ஜி. வி. ஹள்ளிக் கேரி, செய்தியாளர்களிடையே பேசுகையில் குறிப்பிட்டார்.

ஜி. வி. ஹள்ளிக் கேரி மைசூர் மாநில சட்டமன்ற மேலவையில் காங்கிரசு உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது.

நடக்க இருப்பவை :



# அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டங்கள்

## 24--9--67

### சென்னை 32-வது வட்டம்

கே. வி. கே. சாமி நினைவு மன்றச் சார்பில் மாலை 6-30 மணிக்கு வியாசர்பாடி சர்மா நகரில்; தலைவர் : க. அ. இராசப்பா; பேசுவோர்: கி. மனோகரன் எம்.ஏ., எம்.பி., டாக்டர் எம். சந்தோஷம் எம்.பி., நா. வீராசாமி எம்.எல் ஏ., நீலநாராயணன், க. அன்பிற்கரசன் எம்.சி., புலவர் நடேசன், பொன். சண்முகம், வீரராகவலு.

### சென்னை 47-வது வட்டம்

எம். ஜி. ஆர். ரசிகர் மன்றச் சார்பில் இரவு 7-மணிக்கு ஓட்டேரி செல்லப்ப முதலித் தெருவில்; தலைவர்: காஞ்சி கோ. கிருட்டினசாமி; பேசுவோர் : அமைச்சர் சாதிக் பாட்சா, கி. மனோகரன் எம். ஏ., எம். பி., வேலூர் நாராயணன் எம் ஏ. பி.எல்., மு. மாசிலாமணி, அ. இராசகோபால், ந. ஆதிகேசவன், இரா. கோபால்சாமி.

### சென்னை 56-வது வட்டம்

எம். ஜி. ஆர். ரசிகர் மன்றச் சார்பில் இரவு 7-மணிக்கு ஆயிரம் விளக்கு குலாம் அப்பரஸ் அலிகான் 2-வது தெருவில்; தலைவர், எஸ். டி. லாரன்சு; பேசுவோர் : அமைச்சர் செ. மாதவன், புலவர் பொன்னிவளவன், டி. வி. நாராயணசாமி, கே. ஏ. கிருட்டினசாமி எம்.ஏ. பி.எல்., மு. சாமிநாதன் எம்.சி. (காலை 10-மணிக்கு வளையாபதி முத்துகிருஷ்ணன் உணவு வழங்குவார்).

### கோவை

அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழாக் குழுச் சார்பில் இரவு 7-மணிக்கு தெப்பக்குளம் திடலில்; பேசுவோர் : இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன், எஸ்.ஏ.இராசமாணிக்கம் எம்.சி., கே. கோவிந்தராசுலு எம்.சி., எம் எல்.ஏ., தெ. கு. மெய்யப்பன், காட்டூர் கோபால், ஏ. என். சாமி, கேரளசுந்தரம், சி. ரங்கநாதன், இரா. மோகன், வெ. கிருஷ்ணமூர்த்தி, வழக்கறிஞர்கள் அரங்கநாயகம், சுப்பையன், கிருஷ்ணசாமி, அப்துல் சப்பார், அப்துல் சலாம் மற்றும் மு. இராசம்மாள், சி. எஸ். சண்முகம், வெங்கிடபதி, க. மருதாசலம், மு. தண்டபாணி.

### பம்பாய்

தி.மு.க. சார்பில் இரவு 9-30 மணிக்கு கம்பாலாக்குன்று வார்டன் ரோடு நாதன் தையல் அரங்கில்; தலைவர் : அ. பெரிய சுந்தரம்; பேசுவோர் : ச. சொ. சங்கர், எஸ். தியாகராசன், சி. நா. சிதம்பரன், இரா. அன்புமணி, பிளார் வள்ளிமணாளன்.

### செந்தண்ணீர்புரம்

கே.வி.கே. சாமி நினைவுப் படிப்பகச் சார்பில் மாலை 6 மணிக்கு; தலைவர்: காஞ்சி கண்ணப்பர்; பேசுவோர்: எம். குமார், ஆர். நாகசுந்தரம் எம்.எல்.ஏ., அனந்தநம்பியார் எம்.பி., இராமானுசம், இளஞ்செழியன் எம்.எல்.ஏ., அ. நடராசன், செவந்திலிங்கம், கு. ராமசாமி, கா. மு. சீனிவாசன்.

### சென்னை 58-வது வட்டம்

எம் ஜி.ஆர். மன்றச் சார்பில் மாலை 6 மணிக்கு பாட்டர் தோட்டத்தில் (மிட்லண்டு தியேட்டர் பின்புறம்); தலைவர் : முசிறி புத்தன்; பேசுவோர்: பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார், சி. சிட்டிபாபு எம்.பி., அமுதா ராகவன், பூங்கோதை. (தென்னகப் பல்கலைக் குழு சதாசிவம் – மோகனா குழுவினரின் 'அண்ணாவின் அரசு' கலை நிகழ்ச்சி நடைபெறும்.)

### கல்லக்குடி

எம்.ஜி.ஆர். மன்றச் சார்பில் மாலை 6 மணிக்கு அண்ணா படிப்பகத்தில்; தலைவர்: பி. என். பழனிச்சாமி; பேசுவோர் : பெ. சீனிவாசன் எம்.எல்.ஏ, மு-க.து. நடராசன் எம்.எல்.ஏ., அ. தம்புசாமி, கே. கந்தசாமி, எஸ். நடேசன் மற்றும் பலர்.

### பெங்களூர்

எம். ஜி. ஆர். ரசிகர் மன்றம் திறப்பு விழா; மாலை 6-மணிக்கு ஆசால்கானா வீதி (கேவல்ரி ரோடு திருப்பம்)யில்; தலைவர் : எம். அரிதாஸ்; பேசுவோர் : பெங்களூர் பழனியப்பன், சி. வி. ஆடலழகன்.

### குன்னூர்

தி. மு. க. சார்பில் மாலை 5-மணிக்கு வி. பி. தெரு திடலில்; பேசுவோர்: க. வேழவேந்தன் பி.ஏ.,பி.எல்., எம்.எல்.ஏ.,மற்றும் பலர்.

### மதுரை 32-வது வட்டம்

தி. மு. க. சார்பில் இரவு 7-மணிக்கு அனுப்பானடி அண்ணா திடலில்; தலைவர் : தூயவன்; பேசுவோர் : புலவர் அறிவுடைநம்பி, கு. திருப்பதி பி.ஏ,பி.எல்., சி. பாக்கியம்.

### திருவானைக்கோவில்

தி. மு. க. சார்பில் மாலை 6-30 மணிக்கு பாரதித் தெருவில்; தலைவர் : மு. தியாகராசன்; பேசுவோர் : கே. டி. கே. தேவன், புலவர் அருணா, வி. எம். கணேசன், கு. ஆறுமுகம், ச. சுப்பையா.

### கல்லக்குடி

எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் மாலை 6-மணிக்கு அண்ணா படிப்பகத் திடலில்; தலைவர் : பி.என். பழனிச்சாமி; பேசுவோர் : பெ. சீனிவாசன் எம்.ஏ.,பி.எல், எம்.எல்.ஏ., மு. க. து. நடராசன் எம்.எல்.ஏ., அ. தம்புசாமி, கே. கந்தசாமி, எஸ். நடேசன்.

### விருதுநகர்

கலைஞர் கருணாநிதி மன்றச் சார்பில் மாலை 6-மணிக்கு; தலைவர் : பி. சண்முகக்கனி; பேசுவோர் : ஆலடி அருணா பி.ஏ, பி.எல்.,எம்.எல்.ஏ., திருவை. அண்ணாமலை, நாக. இராச மாணிக்கம்.

### வாணியம்பாடி

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு; நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி மற்றும் பலர்.

### வேலூர் (சேலம்)

தி. மு. க. சார்பில் மாலை 6-30 மணிக்கு; தலைவர் : ஏ. இராமையன்; பேசுவோர் : மு. இயலரசன், மு. பழனிவேலன், கே. பி. கந்தசாமி, வி. வணங்காமுடி, வாசுதேவன், வி. ஏ. இலக்குமணன், ப முஸ்தபா, ஏ. இராசு.

### வள்ளியூர்

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு திருவள்ளுவர் கலையரங்கில்; தலைவர் : ஆ. குமரேசன்; பேசுவோர் : ஏ. எல். சுப்பிரமணியம் எம்.எல்.ஏ., எம். ஏ. மஜீத், களந்தை ஜின்னா, ச. சாமிதுரை, ம. செங்குட்டுவன், ம. குருபாதம், ஆ. மகாராசன்.

### மின்பாறை

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு கலைவாணர் திடலில், பேசுவோர் : க. அன்பரசு, இ. இராமசாமி.

### நாச்சியார்கோவில்

தி.மு.க. சார்பில் அமைச்சர் மு. கருணாநிதிக்குப் பாராட்டு; காலை 11 மணிக்கு வடக்கு வீதியில்; தலைவர் : சு. பத்மநாபன்; பாராட்டுவோர் : ப. நாராயணசாமி, எஸ். கணேசன் எம்.எல்.ஏ., ந. சோமசுந்தரம் எம்.எல்.ஏ., கோ. சி. மணி, அ. சர்புதீன்.

### கோவை

தி. மு. க. சார்பில் இரவு 7 மணிக்கு தெப்பக்குளம் மைதானத்தில்; தலைவர் : கி. அரங்கநாதன்; பேசுவோர் : சட்டமன்றப் பேரவைத் தலைவர் சி. பா. ஆதித்தனார், இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன், க. இராசாராம் பி.ஏ., எம்.பி., சே அ. இராசமாணிக்கம் எம்.சி., கே. கோவிந்தராசன் எம்.எல்.ஏ., மற்றும் பலர்.

### வாணியம்பாடி

தி. மு. க. சார்பில் இரவு 8-மணிக்கு சந்தைத் திடலில்; தலைவர் : கே. பி. சாமிநாதன்; பேசுவோர் : நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி, வெ. கண்ணன், ஜெ. ஏ. ஜப்பார், எம். பி. வடிவேல், டி. சி. திம்மராயன் எம்.எல்.ஏ., சி. எம். எஸ். பாலு, வி. என். தத்தப்பன்.

### பள்ளிபாளையம்

தி.மு.க. சார்பில் மாலை 6-30 மணிக்கு ஆர். கந்தசாமி திடலில்; தலைவர் : பி. சி. துரைசாமி; பேசுவோர் : சிற்றுளி சுப்பிரமணியம், சேதுபாஸ்கரன் எம்.பி பி.எஸ்., டி.ஜி.ஓ., டி. ஏ. இராசவேலு எம்.எல்.ஏ., என். ஏ. நடேசன், ப. ச. விசுவநாதன், நா. நடேசன்.

### திண்டுக்கல் 13-வது வட்டம்

எம்.ஜி.ஆர். மன்றச் சார்பில் இரவு 7 மணிக்கு மக்கான் தெருவில்; தலைவர் : டி. பி. எம். ஜெயினுலாப் தீன்; பேசுவோர் : தில்லை வில்லாளன் எம்.ஏ.பி.எல்.,

## 25--9--67

### தண்ணீர்க்குன்னம்

தி. மு. க. சார்பில் மாலை 6-30 மணிக்கு பள்ளிவாசல் தெருவில்; தலைவர் : ப. நாராயணசாமி; பேசுவோர் : கோ. சி. மணி, எஸ். டி சோமசுந்தரம் பி ஏ, கு. பாலகிருட்டினன், ஏ. எம். ஏ. ரகீம்.

### அருப்புக்கோட்டை

தி. மு. க. சார்பில் இரவு 7-மணிக்கு பாண்டியன் திடலில்; தலைவர் : சி. காந்திதாசு எம்.ஏ. பி.எல், பேசுவோர் : பெ. சீனிவாசன் எம்.ஏ.பி.எல், எம். எஸ். இராமசாமி, சிவ. சண்முகசுந்தரனார், இர. சின்னச்சாமி, பி. பி. என். நல்லதம்பி.

### சென்னை 46-வது வட்டம்

எஸ். எஸ். ஆர். மன்றச் சார்பில் மாலை 6-மணிக்கு நம்மாள்வார்பேட்டை சின்னபாபு தெருவில்; டி. இராசரத்தினம் எம்.எல்.ஏ. தலைமையில் பூவை. இராமானுசத்தின் கலை நிகழ்ச்சி நடைபெறும்.

### ஏமப்பூர்

தி. மு. க. சார்பில் மாலை 5-மணிக்கு மந்தக்கரைத் திடலில்; தலைவர் : மு. சீனிவாசன்; பேசுவோர் : அ. சே. குமாரசாமி பி.எஸ்சி., தி. வ. அண்ணாதாசன், வரதராசன். (இராணி–கரிகாலன் கலை நிகழ்ச்சி நடைபெறும்.)

### மேல்படப்பை

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு பஜனைக் கோயில் திடலில்; தலைவர் : பி. சின்னசாமி; பேசுவோர் : அமைச்சர் சாதிக் பாட்சா, பி. சிவசங்கரன் எம்.பி., எம். கோபால் எம்.எல்.ஏ., டி. இராசரத்தினம் எம்.எல்.ஏ , எம். வி. சோலையப்பன், பி.சுப்பிரமணியம், மூ. சி. முனுசாமி, மு. ஆறுமுகம், தி. சம்புலிங்கம், எ. தம்பிரான், எஸ். சண்முகம்.

### மதுரை

பகுத்தறிவுப் பாசறைச் சார்பில் இரவு 7 மணிக்கு சுப்பிரமணியபுரம் அண்ணா திடலில்; தலைவர்: வீ. அழகர்; பேசுவோர்: சி. பி. சிற்றரசு எம்.எல்.சி., கு. திருப்பதி பி.ஏ.பி.எல், எஸ். டி. நடராசன், பட்டுராசன் பி.ஏ. பி.எல்., பி. கே. சேதுராமன்.

### ஓவியம்பாளையம்

தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு, அண்ணா திடலில்; தலைவர் : வி. பழனிசாமி: பேசுவோர் : தமிழழகன், சி. வி. வேலப்பன் எம் எல்.ஏ., பொத்தனூர் மணிமாறன், ப. மாரப்பன்; பரமத்தி ஏ. சண்முகம், இரா. நல்லண்ணன், ஏ. பி. பொன்னுசாமி, என். பி. பெரியசாமி.

## விழா நிகழ்ச்சிகள்

### சென்னை 24-வது வட்டம்

எம். ஜி. ஆர். ரசிகர் மன்றச் சார்பில் 24—9—37 காலை 10-மணிக்கு மூலக்கொத்தளத்தில் எம். பி. முத்து தலைமையில் கி. மனோகரன் எம்.ஏ.,எம்.பி. உணவு வழங்குவார்; ஜி. குசேலர் எம்.பி. கொடியேற்றுவார்; எஸ். எம். துரைராசு எம்.எல்.ஏ. அண்ணா படத்தைத் திறப்பார்; பே. தா. இன்மொழியன், துரை. செல்வராசன், அரங்கநாதன், என். ஏழுமலை, சோதிவேலு ஆகியோர் உரையாற்றுவர்.

### சென்னை 6-வது வட்டம்

இளங்கோ கலைமன்றச் சார்பில் 24—9—67 காலை 8-மணிக்கு, நா. நா. தோட்டம் 8-வது தெருவில், த. நாதன் தலைமையில் கே. எம். கண்ணபிரான் கொடியேற்றுவார்; மு. வேதாசலம் எம்.எல்.ஏ., த. சேதுராசன், க. கணேசன், சா. மாணிக்கம், சே. குசால்தாஸ், வெ. நாராயணன் ஆகியோர் பேசுவர்.

### சென்னை 73-வது வட்டம்

எம்.ஜி.ஆர். ரசிகர் மன்றச் சார்பில் 24—9—67 காலை 10 மணிக்கு சேப்பாக்கம்—லால்பேகம் தெரு, எண் 27-ல், ஆதிகேசவன் தலைமையில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் கொடியேற்றுவார்; க. அறிவழகன் எம்.ஏ , எம்.எல்.சி., அ. வீ. அகிலன், ஆ. வெ. செயராமன், மாதவமனோதீபன், கி. பாஸ்கரன் எம்.சி., நடிகர் இராமா ராவ் ஆகியோர் பேசுவர்: நடிகர் கே. கண்ணன் ஏழைகளுக்கு உணவு அளிப்பார்.

### சென்னை 53-வது வட்டம்

தி.மு.க. ஆதரவாளர்கள் சார்பில், 24—9—67 காலை 10 மணிக்கு சேத்துப்பட்டு செகநாதபுரம் பள்ளிக்கூடத் தெருவில் — எம். ஏ. பழனி எம்.சி. தலைமையில், கி. மனோகரன் எம்.ஏ., எம்.பி. கொடியேற்றுவார்; துரை. கலியரெத்தினம் எம்.ஏ., சசி. இராசேந்திரன் பி.ஏ., அ. சு. சண்முகசுந்தரம் பி.ஏ.பி.எல்., ஜீவா. கலைமணி பி.ஏ., வெ. அரங்கநாதன், இரா. நடராசன், க. இலக்குமணன் ஆகியோர் பேசுவர்; இரா. வேதாசலம் 2,000 பேருக்கு இனிப்பு வழங்குவார்.

தியாகராயர் நினைவு மன்றச் சார்பில் 24—9—67 காலை 9 மணிக்கு சேத்துப்பட்டு—மங்களபுரம் 7-வது தெருவில்—இரா. நடராசன் தலைமையில்—கி. மனோகரன் எம்.ஏ., எம்.பி. கொடியேற்றுவார்; அ. சு. சண்முகசுந்தரம் பி.ஏ.பி.எல்., ஜீவா. கலைமணி பி.ஏ., துரை. கலியரெத்தினம் பி.ஏ.பி.எல்., சசி. இராசேந்திரன் பி.ஏ., எம். ஏ. பழனி எம்.சி., க. இலக்குமணன் ஆகியோர் பேசுவர்; எஸ். டி. கபாலி 2,000 பேருக்கு உணவு வழங்குவார். (இரவு 7 மணிக்கு சாரங்கபாணி, தனராசு, அரசு குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெறும்.)

### சென்னை 47-வது வட்டம்

ஓட்டேரி பிரிக்ளின் சாலை நான்காவது வீதியில் உள்ள சிங்கத் தமிழன் சின்னச்சாமி மன்றத்தில் 24—9—67 காலை 10-மணிக்கு இரா. கோபாலசாமி தலைமையில் வேலூர் நாராயணன் எம்.ஏ. பி.எல். கழகக் கொடியேற்றிவைப்பார்; வ. கு. நன்னன் இனிப்பு வழங்குவார்; பகல் 12-மணிக்கு இராஜேசுவரி கோபாலசாமி 1000 பேருக்குஉணவு வழங்குவார்; இரவு 10-மணிக்கு செல்லப்பா குழுவினரால் இசை நடன நிகழ்ச்சி நடைபெறும்.

### கோவையில்

24—9—67 மாலை 3-மணியளவில் ஆர். எஸ். புரம் கிளப் மைதானத்திலிருந்து இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் தலைமையில்—அலங்கரிக்கப்பட்ட வண்டியில் அண்ணா படத்துடன் தலைவர்கள் அமர்ந்துவர—யானை, குதிரை, செண்டை, நாதசுரம், நையாண்டி மேளம், தாரை தப்பட்டைகளுடன் கழகத் தோழர்கள் பலவித வேடங்கள் அணிந்துவர—மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு நகரின் முக்கிய வீதிகளின் வழியாக தெப்பக்குளம் மைதானத்தை அடையும்.

---

## பாலர் அரங்கம்

செப்டம்பர் 24-ந் தேதி
மாலை 4 மணிக்கு

சென்னை-மயிலாப்பூர் செயிண்ட் தாமஸ் கான்வெண்ட் பள்ளி மாணவர்கள் நிகழ்த்தும்

## சிறுவர் கலை நிகழ்ச்சி

கட்டணம் வழக்கம்போல்

---

## ரோமாபுரி!

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

நீரைக் கொட்டிக் கொட்டிக் கொண்டிருக்கும் சிலைகள் பல இருக்கின்றன!

ஏதாவது ஒரு சலவைக்கல் சிலை—நான்கு அல்லது ஐந்து அடி உயரத்தில் ஒவ்வொரு வீட்டிலும் இருக்கும்!

'திரேவி' என்ற நீரூற்று, ரோம் நகரில் பெயர் பெற்றதாகும். அந்த நீரூற்றில், வருபவர்கள் காசு போடுகிறார்கள்! திரும்பி நின்று காசைப் போட்டு விட்டு நேராகப் போய்விட்டால், மீண்டும் ரோமுக்குத் திரும்பி வரலாமாம்! அதேபோல் என்னையும் போடச் சொன்னார்கள்; 'வெளிநாட்டுச் செலாவணி என்பது இந்தியாவுக்கு மிக அருமையானது; அதில் ஒரு காசைக்கூட இப்படி நான் போடமாட்டேன்' என்று நான் கூறிவிட்டேன்!

(இக்கட்டுரையின் தொடர்ச்சி அடுத்த இதழில்)

---

## கோவை மு. இராமநாதன்

சுற்றுப்பயணம்

செப். 24: தாராபுரம்; 25: கோவை நகரம்; 26: சுவாமிமலை—குடந்தை; 27 முதல் 30-வரை: அறந்தாங்கி வட்டம். அக். 4: நத்தம்; 5: சிறுகுடி; 6 முதல் 9-வரை: மதுரை நகரம்; 10: கரூர்; 11: கரூர் — தவுட்டுப்பாளையம்; 12: சின்னாளப்பட்டி; 13: லாலாப்பேட்டை; 14: துவாகுடி–திருச்சி; 15 முதல் 17-வரை: திருச்சி நகரம்; 18: காரைக்குடி; 19: பார்த்திபனூர்; 22: நாகப்பட்டினம்; 28, 29: குடந்தை நகரம்.

---

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) [illegible]